European Union

## ஊடக வெளியீடு

### ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒழுங்கிணைப்பாளர் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு விஜயம்

*10 ஜுலை 2019, கொழும்பு* – ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒழுங்கிணைப்பாளர் திரு. ஜில்ஸ் டி கெர்ஸ்ஷொவ், ஜுலை 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இரு நாடுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவிகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலும், அனுபவங்களை சிறந்த வழிமுறையில் பகிர்ந்து கொள்ளக்கூடிய வழிமுறைகளை வடிவமைப்பது பற்றியும் கவனம் செலுத்துவதாக இந்த விஜயம் அமைந்திருக்கும்.

இலங்கையிலிருக்கும் காலப்பகுதியில், இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள், எதிர்கட்சி உறுப்பினர்கள், பாதுகாப்பு தரப்பு மற்றும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் சந்திப்பில் டி கெர்ஸ்ஷொவ் ஈடுபடுவார்.

மாலைதீவுகளுக்கான விஜயத்தின் போது, சில அமைச்சர்களுடான சந்திப்புகளிலும், பாதுகாப்பு அதிகாரிகளுடனான சந்திப்புகளிலும் டி கெர்ஸ்ஷொவ் ஈடுபடுவார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளிலுள்ள இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளிலும் இவர் பங்கேற்பார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒழுங்குபடுத்துநராக 2007 ஆம் ஆண்டு முதல் ஜில்ஸ் டி கெர்ஸ்ஷொவ் செயற்படுகின்றார். லொவெய்ன் கத்தோலிக்க பல்கலைக்கழகம், பிரசல்ஸ் ஃபிரீ பல்கலைக்கழகம் மற்றும் பிரசல்ஸ் சென்ட் லுயிஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஐரோப்பிய சட்டம் பற்றிய கற்பித்தல்களை இவர் முன்னெடுத்து வருகின்றார். ஐரோப்பிய சட்டம், மனித உரிமைகள், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகியன தொடர்பான ஆக்கங்கள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றை டி கெர்ஸ்ஷொவ் வெளியிட்டுள்ளார்.

END

தொடர்புகளுக்கு:
Political, Trade and Communications Section
Delegation of the European Union to Sri Lanka and the Maldives
Tel: + 94 11 2674413-4